# ஒன்றிய அரசின் நிதி நெருக்கடிகளையும் பாரபட்ச அணுகுமுறையையும் தாண்டி நல்லாட்சி நடத்திவரும் முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில்

# தமிழ்நாட்டின் வளர்ச்சியைத் தொடர்ந்து வென்றெடுப்போம்!

## பேரவையில் – இடைக்கால நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்து – நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு உரை!

சென்னை, பிப்.19-

**“ஒன்றிய அரசின் நிதிநெருக்கடிகளையும் பாரபட்ச அணுகுமுறையையும் தாண்டி நல்லாட்சி நடத்திவரும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் தமிழ்நாட்டின் வளர்ச்சியைத் தொடர்ந்து வென்றெடுப்போம்” என்று நிதியமைச்சர் தங்கம் தென்னரசு அவர்கள் சட்டப் பேரவையில் இடைக்கால நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்து உரையாற்றும்போது கூறினார்.**

தமிழ்நாடு அரசின் நிதி மற்றும் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்கள், 2026-27 ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளை 2026 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 17 ஆம் நாள் சட்டமன்றப் பேரவை முன் வைத்து ஆற்றிய உரை வருமாறு:-

பேரவைத் தலைவர் அவர்களே.

2026-27 ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகளை வரலாற்றுப் பெருமை மிகுந்த இந்த சட்டமன்றத்தின்முன் வைப்பதில் நான் பெருமிதம் கொள்கிறேன். இந்தியத் திருநாட்டின் இரண்டாவது மிகப்பெரிய பொருளாதாரமாக திகழ்வது மட்டுமின்றி, நாட்டிலேயே இரட்டை இலக்க உயர் பொருளாதார வளர்ச்சியை தமிழ்நாடு அடையும் வகையில், கடந்த ஐந்து ஆண்டுகளில் நாடே போற்றும் நல்ல பல திட்டங்களை நிறைவேற்றி, நல்வழி காட்டிய முதலமைச்சர் அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

2. காலத்தை வென்ற அய்யன் திருவள்ளுவரின் வாக்கினை இம்மாமன்றத்தில் பதிவு செய்து எனது உரையை தொடங்குகிறேன்.

**“பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்**
**தொகுத்தவற்றுள் எல்லாந் தலை”**
**(குறள் 322)**

இருப்போர் - இல்லாதோர் என்றில்லாமல், கிடைத்ததைப் பகிர்ந்துகொண்டு, எல்லா உயிர்களும் வாழ வேண்டும் என்ற சமநிலைக் கொள்கைக்கு ஈடானது வேறு எதுவுமே இல்லை.

3. வான்புகழ் வள்ளுவரின் வாக்கினைப் பின்பற்றி நானிலம் போற்றும் வகையில், முதலமைச்சர் அவர்களால் தமிழ்நாட்டின் வளர்ச்சி வழிநடத்தப்பட்டு வருகிறது. மகளிர், மழலையர், முதியோர், தொல் பழங்குடியினர், மாற்றுத்திறனாளிகள் என கடைக்கோடித் தமிழரும் தமிழ்நாட்டின் வளர்ச்சிப் பயணத்தில் பங்குபெறும் சூழல் உருவாகியிருப்பது தனிச் சிறப்பாகும். ஏற்றுமதியைப் பெருக்கி, பணவீக்கத்தைக் குறைத்து உயர் பொருளாதார வளர்ச்சியை அடைந்திட்ட அதே வேளையில் தமிழ்நாட்டில் வறுமையை ஒழிக்கும் இறுதிப் போரையும் நாம் தொடங்கி இருக்கிறோம். மாநிலமெங்கும் பரவலான தொழில் வளர்ச்சியை உருவாக்கிட முன் முயற்சிகள் எடுத்திடும் பின்னணியில் தொழிலாளர் நலன் காக்கவும் பெருந்திட்டங்கள் தீட்டப்படுகின்றன. மிகப்பெரும் அளவில் வெளிநாட்டுத் தொழில் முதலீடுகளை ஈர்த்திட எடுத்திடும் முயற்சிகளுக்குச் சற்றும் குறையாமல் சிறு, குறுந்தொழில் வளர்ச்சியையும் வழிநடத்தியுள்ளோம். மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு அதிகளவு வங்கிக் கடன் உதவி மட்டுமின்றி விண்வெளித் தொழில்நுட்ப புத்தொழில் நிறுவனங்கள் மலர்ந்து செழித்திடவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. அனைவருக்கும் உணவுப் பாதுகாப்பை உறுதிசெய்திடும் முனைப்பில் நீர்வளம் பெருக்கி உணவு உற்பத்தியில் வரலாறு காணாத சாதனையை நாம் நிகழ்த்திக் காட்டியுள்ளோம். நவீன திறன் பயிற்சிகள் பெற்று உலகை வெல்லும் தமிழக இளைஞரை உருவாக்கிட நாம் வடிவமைத்த முன்னோடித் திட்டங்கள் அடைந்த வெற்றி, உலகப் புகழ் பெற்ற பல்கலைக்கழகங்களைத் தமிழ்நாட்டிற்கு வருகை புரியவும் வைத்துள்ளன.

4. செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட அறிவுசார் பொருளாதாரத்தில் நம் இளைஞர்கள் சிறந்து விளங்கிட உரிய திட்டங்கள் தீட்டப்படும் அதே வேளையில் தமிழர்தம் தொன்மையினை அடுத்த தலைமுறையினர் அறிந்துகொள்ளும் வகையில் கீழடி, பொருநை அருங்காட்சியகங்களை அழகுற வடிவமைத்துள்ளோம். மாவட்டந்தோறும் மாபெரும் தொழில் பூங்காக்கள், நான்குவழிச் சாலைகள், மேம்பாலங்கள் எனும் வளர்ச்சிப் பாதையில் முன்னேறும் தமிழ் நிலப்பரப்பில், வனவிலங்குகள், பறவைகள் சரணாலயங்கள் மற்றும் கடல்வாழ் உயிரினப் பாதுகாப்பு, அதிகரிக்கும் வனப் பரப்பு என பசுமை வழிப் பயணத்திற்கும் உரிய கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.



தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், நேற்று முன்தினம் (17.2.2026) தமிழ்நாடு அரசின் 2026–2027ஆம் ஆண்டிற்கான இடைக்கால நிதிநிலை அறிக்கையை நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு தாக்கல் செய்தார்.

## மகளிர் வாழ்வை மேம்படுத்திட பல முன்னோடித் திட்டங்கள்!

தமிழர் நலன் கருதி நாம் உருவாக்கும் நலத் திட்டங்கள் பலவற்றை பிற மாநிலங்களும் பின்பற்றத் தொடங்கி இருப்பதால், **மக்கள் நல அரசுக்கான இலக்கணத்தை வகுத்திடும் வகையில் நாட்டிற்கே வழிகாட்டும் நாட்டிற்குக் கடமையினை நாம் மிகுந்த பொறுப்புணர்வுடன் செயல்படுத்தி வருகிறோம்.**

5. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அரை நூற்றாண்டுக்கு முன்னரே ஓர் வரவுசெலவுத் திட்டம் எப்படி அமைந்திட வேண்டும் என்று நமக்கு வழிகாட்டிச் சென்றிருப்பதை நான் இங்கு பதிவு செய்ய விரும்புகிறேன்.

**“தீட்டப்பட்ட திட்டம் ஒன்றிற்குத் தேவையான நிதி வாயில்களை எந்த வழியில் திரட்ட முடியும் என்பதிற்தான் கவனம் செலுத்த வேண்டுமே தவிர, வேண்டிய நிதி வசதிகள் தற்போது காணப்படவில்லை என்பதால், திட்டச் செலவையும், வளர்ச்சி விரைவையும் குறைப்பது முறையாகாது. ஆக்கப் பணிகளை நிறைவேற்றும் வேகம் சிறிதும் குன்றாத, திட்டமிட்ட வளர்ச்சிக்கு நம்முடைய வரவுசெலவுத் திட்டம் ஒரு கருவியாக இருக்க வேண்டும்.”**

கடந்த 1971-72 ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத் திட்ட அறிக்கையில் இடம் பெற்றிருந்த முத்தமிழறிஞர் கலைஞரின் அறிவுரையினை நாம் வழுவாது பின்பற்றி வருவதால் தான், இன்று பல்வேறு துறைகளில் நாட்டிலேயே பெரு வளர்ச்சி பெற்று தமிழ்நாடு முதன்மை மாநிலமாகத் திகழ்ந்து கொண்டிருக்கிறது.

6. ஒன்றிய அரசின் மாற்றாந்தாய் மனப்பான்மை ஒருபுறம் உலக வர்த்தகச் சூழலில் காணப்படும் ஏற்றத் தாழ்வுகள் மறுபுறம் என சவால்கள் பலவற்றைச் சந்தித்து வந்தபோதிலும், நம் முன்னோர் வகுத்துத் தந்த சமூக நீதிப் பாதையில் வழுவாது பயணித்திட நம்மை தொடர்ந்து வழிநடத்துபவர் பேரறிஞர் பெருந்தகை அண்ணா மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் தொலைநோக்குப் பார்வைதான்.

**தமிழ் மொழி வளர்ச்சி**

7. முக்கடல் சங்கமிக்கும் குமரிமுனையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் வான்புகழ் வள்ளுவருக்கு அமைக்கப்பட்ட திருவுருவச் சிலைக்கு ‘**பேரறிவுச் சிலை**’ எனப் பெயரிட்டு அறிவித்தவர் நமது முதலமைச்சர் அவர்கள். உலகப் பொதுமறையைத் திருக்குறளை உலகெங்கும் கொண்டு சேர்க்கும் இலக்குடன், ஐக்கிய நாடுகள் அவையினால் அங்கீகரிக்கப்பட்ட அனைத்து அலுவல் மொழிகளிலும் மொழிபெயர்ப்பு செய்திடும் பணிகள் நடைபெற்று வருகின்றன. **மனோன்மணியம் சுந்தரனார் இயற்றிய, நம் உயிருக்கு நிகரான ‘தமிழ்த் தாய் வாழ்த்து’ தமிழ்நாட்டின் மாநிலப் பாடலாக இந்த அரசு அறிவித்துள்ளது.**

8. தமிழ்மொழியின் பல்துறை வளங்களைச் செழிக்கச் செய்வதற்கான தொலைநோக்குத் திட்டங்களை இந்த அரசு நிறைவேற்றி வருகிறது. பிறமொழி ஆதிக்கங்களில் இருந்து தமிழைக் காத்தல் மற்றும் செழுமையான தமிழ்ப் படைப்புகளைத் தொடர்ந்து உருவாக்குதல் ஆகிய பணிகளை பெரும் முனைப்போடு இந்த அரசு மேற்கொண்டு வருகிறது. பிறமொழித் திணிப்பால் தமிழுக்கு வந்த இடரினை எதிர்த்துப் போராடி, தங்கள் இன்னுயிர் ஈந்த மொழித்தீரர்களின் தியாகத்தைப் போற்றும் வண்ணம், ஜனவரி திங்கள் 25 ஆம் நாளை ‘**தமிழ்மொழித் தியாகிகள் நாளாக**’ இந்த அரசு கடைப்பிடித்திட ஆணையிட்டுள்ளது.

9. பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்களை தமிழில் மொழிபெயர்த்தல் போன்றே, தமிழில் வெளியான சிறந்த நூல்களை ஆங்கிலம் முதலான அயல்மொழிகளில் மொழிபெயர்த்து வெளியிடும் முயற்சியான ‘**திசைதோறும் திராவிடம்**’ திட்டத்தின் கீழ், இதுவரை 74 நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. மருத்துவம், பொறியியல் முதலான கல்விசார் அறிவூட்டும் நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்து வெளியிடும் ‘**முத்தமிழறிஞர் மொழிபெயர்ப்புத் திட்டத்தின்**’ கீழ், 160 நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. பெரியாரின் சிந்தனைகளை அயல்மொழிகளில் வெளியிடும் முயற்சியில், இதுவரை ஆங்கிலம், பிரெஞ்சு, அரபு, இந்தி, குஜராத்தி முதலான 21 மொழிகளில் பல்வேறு நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. அண்ணல் அம்பேத்கர் அவர்களின் படைப்புகளை எளிய தமிழில் மொழிபெயர்த்து மக்கள் பதிப்பாக வெளியிடும் முடிவு செய்து, இதுவரை 27 தொகுதிகள் வெளியிடப்பட்டுள்ளன.

10. தேமதுரத் தமிழோசை அகிலமெலாம் ஒலிக்கும் வகையில், 42 உலக நாடுகளில் 202 தொடர்பு மையங்களை ஏற்படுத்தி, அவற்றின் மூலம் மாணவர்களை ஒருங்கிணைத்து இணையவழித் தமிழ்க் கல்வி வழங்கப்படுகிறது. கணித்தமிழை வளர்த்தெடுக்கும் முன்னோடி முயற்சியாக, இந்தியாவில் வேறெந்த மாநிலமும் செய்திராத வகையில், **பன்னாட்டுக் கணித்தமிழ்க் கருத்தரங்கம்** வெற்றிகரமாக நடத்தப்பட்டது.

**பண்பாடு**

11. தமிழ்நாட்டின் பண்பாட்டுச் செழுமையையும், பழமையான கலைகளையும், நமது மக்களுக்குக் குறிப்பாக இளைஞர்களுக்கு அறிமுகப்படுத்திட பல்வேறு முயற்சிகளை இந்த அரசு மேற்கொண்டு வருகிறது. தமிழ்நாட்டின் கலைகளை வெளிமாநிலங்களிலும் வெளிநாடுகளிலும் பரப்பிட கலைநிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன. கடந்த ஐந்து ஆண்டுகளில், நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு வாய்ப்பளிக்கும் வகையில், **சங்கமம் - நம்ம ஊரு திருவிழா** சென்னை மற்றும் தமிழ்நாட்டின் முக்கிய நகரங்களில் நடத்தப்பட்டு வருகிறது. ‘**சமத்துவப் பொங்கல் விழா**’ சிறப்பாக அனைத்து மாவட்டங்களிலும் நடத்தப்படுகிறது.

12. இந்திய அளவில் மட்டுமின்றி உலக அளவிலும், **இரும்புத் தாதுவிலிருந்து இரும்பை பிரித்து எடுக்கும் தொழில்நுட்பம் தமிழ் நிலப்பரப்பில் இருந்தே அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது** என்பதை அண்மைக் கால அகழாய்வு முடிவுகள் வாயிலாக நிலைநாட்டிய முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பு நாடெங்கும் போற்றப்பட்டது. தமிழ்நாட்டின் பல்வேறு இடங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுகளில் வெளிக்கொணரப்பட்ட தொல்பொருட்களை அழகுற காட்சிப்படுத்த, இந்த அரசு உரிய நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இவற்றில், உலகத் தரத்திலான கீழடி மற்றும் பொருநை அருங்காட்சியகங்கள் ஏற்கெனவே பொதுமக்களின் பார்வைக்காக திறந்து வைக்கப்பட்டு பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளன. மேலும், கீழடி திறந்தவெளி அருங்காட்சியகம் அண்மையில் மக்கள் பார்வைக்காக திறந்து வைக்கப்பட்டது. இவை தவிர, தஞ்சாவூரில் மாபெரும் சோழர் அருங்காட்சியகம், கங்கைகொண்டசோழபுரத்தில் அருங்காட்சியகம், ஈரோடு மாவட்டத்தில் நொய்யல் அருங்காட்சியகம், இராமநாதபுரம் மாவட்டத்தில் நாவாய் அருங்காட்சியகம், சென்னை எழும்பூரில் உள்ள அரசு அருங்காட்சியகத்தில் ஒரு புதிய வெண்கல அருங்காட்சியகம் மற்றும் சிந்துவெளி நாகரிக அருங்காட்சியகக் கூடங்கள் மற்றும் திருவண்ணாமலையில் தமிழர் பண்பாட்டு அருங்காட்சியகம் என மொத்தம் 285 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட உள்ளன.

**அயலகத் தமிழர் நலன்**

13. புலம்பெயர் தமிழர்களின் பாதுகாப்பு மற்றும் தேவைகளை நிறைவு செய்வதற்காக, **அயலகத் தமிழர் நல வாரியத்தை** இந்த அரசு அமைத்துள்ளது. அயல்நாடுகளில் வாழும் தமிழர்களின் சாதனை, பண்பாடு மற்றும் தாயகத்துடனான பிணைப்பைப் போற்றும் வகையில், ஒவ்வொரு ஆண்டும், ஜனவரி 11 மற்றும் 12 ஆகிய தேதிகளில் **அயலகத் தமிழர் தினம்** சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. இவ்வாண்டு, ‘**தமிழால் இணைவோம் தரணியில் உயர்வோம்**’ என்ற கருப்பொருளில் அயலகத் தமிழர் தினம் கொண்டாடப்பட்டது. வெளிநாடுகளிலும், பிற மாநிலங்களிலும் வசிக்கும் தமிழர்களின் குழந்தைகளுக்கு தமிழ்மொழியைக் கற்பிக்கும் இந்த அரசின் முயற்சிகளால், இதுவரை 8 பிற மாநிலங்கள் மற்றும் 14 அயல்நாடுகளில் மையங்கள் தொடங்கப்பட்டு 1,400 மாணவர்கள் பயனடைந்துள்ளனர். இது தவிர, தமிழ் ஆசிரியர்கள் மற்றும் கலைஞர்களைக் கொண்டு, தமிழ்மொழியையும், நாட்டுப்புறக் கலைகளையும் பயிற்றுவிக்கும் நேரடி வகுப்புகள் நடத்திடும் வதற்கான பணிகளும் 10 கோடி ரூபாய் செலவில் நடைபெற்று வருகின்றன.

14. தமிழ்ப் பண்பாட்டின் வேர்களுடன் அயலகத் தமிழர்களின் தொடர்பைப் புதுப்பிக்கும் வகையில், ஒவ்வொரு ஆண்டும் வெளிநாட்டில் குடியேறிய பழந்தலைமுறைகளைச் சார்ந்த தமிழர்களில் 200 மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டு, அவர்களுக்கான பண்பாட்டுப் பயணத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரை இத்திட்டத்தின் கீழ் ரீயூனியன் தீவுகள், தென் ஆப்ரிக்கா, உகாண்டா, பிஜி, இந்தோனேஷியா, மொரிஷியஸ், ஆஸ்திரேலியா,

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்

## முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தால் மாணவர் சேர்க்கை அதிகரிப்பு!

### திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி

## தமிழ்நாடு கால நிலை உச்சி மாநாடு 4.0!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

சென்னை, பிப். 19–

**தமிழ்நாடு காலநிலை உச்சி மாநாடு 4.0 தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்து, தமிழ்நாடு கடலோர வளங்களை நிலைநிறுத்தத்தக்க வகையில் பயன்படுத்துதல் மற்றும் நீலப் பொருளாதாரம் (TN-SHORE) எனும் திட்டத்தினை தொடங்கி வைத்து, தஞ்சை மனோராவில், கடற்பசு பாதுகாப்பு மையம் அமைத்திட அடிக்கல் நாட்டினார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (17.2.2026) சென்னையில், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறையின் கீழ் செயல்பட்டுவரும் தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கத்தின் சார்பில் இரண்டு நாட்கள் (17.02.2026 மற்றும் 18.02.2026) நடைபெறும் "தமிழ்நாடு காலநிலை உச்சி மாநாடு 4.0" மாநாட்டினை தொடங்கி வைத்தார்.

**தமிழ்நாடு கடலோர வளங்களை நிலைநிறுத்தத்தக்க வகையில் பயன்படுத்துதல் மற்றும் நீலப் பொருளாதாரம் (TN-SHORE) எனும் திட்டம்**

இந்த மாநாட்டில், TN-SHORE (Tamil Nadu Sustainably Harnessing Ocean Resources and Blue Economy) எனப்படுகின்ற தமிழ்நாடு கடலோர வளங்களை நிலைநிறுத்தத்தக்க வகையில் பயன்படுத்துதல் மற்றும் நீலப் பொருளாதாரம் எனும் திட்டத்தினை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்து, அத்திட்டத்தின் கீழ்,

34 அலையாத்திப் பாதுகாப்புக் குழுக்களுக்கான சுழற்சி நிதி மற்றும் குறுங்கடன்களுக்கு என ஒதுக்கப்பட்டிருந்த 1.70 கோடி ரூபாயிலிருந்து கிள்ளை - எம்ஜிஆர் நகர் அலையாத்திக் காடுகள் பாதுகாப்புக் குழு, கிள்ளை - கலைஞர் நகர் அலையாத்திக் காடுகள் பாதுகாப்புக் குழு மற்றும் கிள்ளை - சிசில் நகர் அலையாத்திக் காடுகள் பாதுகாப்புக் குழு ஆகிய மூன்று குழுக்களுக்கு தலா 5 இலட்சம் ரூபாய் வீதம் நிதி வழங்கினார். இந்நிதி, கடலோர சமூக மக்களின் வாழ்வாதாரம் மேம்படவும், பொருளாதாரம் வலுவடையவும் உதவிடும்.

**கடற்பசு பாதுகாப்பு மையம் அமைத்திட அடிக்கல் நாட்டி, தமிழ்நாடு பசுமைக் காலநிலை நிதியினை வழங்குதல்**

அதனைத் தொடர்ந்து, தஞ்சை மனோராவில், கடற்பசு பாதுகாப்பு மையம் அமைத்திட தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார். மேலும், கண்ணபிரான் பாலிமர்ஸ், ஊர் கேப்ஸ் மற்றும் ஈசிகோ பவர் பிரைவேட் லிமிடெட் ஆகிய நிறுவனங்களுக்கு சுழல் பொருளாதாரம் மற்றும் பசுமை போக்குவரத்து ஆகிய சூழலுக்குகந்த தொழில் முனைவுகளை மேம்படுத்தும் வண்ணம் தமிழ்நாடு பசுமைக் காலநிலை நிதியினை வழங்கினார்.

**சுழற்சிப் பொருளாதார மையம் அமைத்திட புரிந்துணர்வு ஒப்பந்தம்**

தொடர்ந்து, முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில், இந்தியத் தொழில்நுட்பக் கழகம் சென்னையில் சுழற்சிப் பொருளாதார மையம் அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் சென்னை-இந்தியத் தொழில்நுட்பக் கழகம், ஐக்கிய நாடுகள் சுற்றுச்சூழல் திட்டம் மற்றும் தமிழ்நாடு பசுமைக் காலநிலை நிறுவனம் ஆகியவற்றிற்கு இடையே மேற்கொள்ளப்பட்டது.

இரண்டு நாட்கள் நடைபெறும் தமிழ்நாடு காலநிலை உச்சி மாநாட்டின் முதல் நாளான இன்று, காலநிலை நடவடிக்கையில் தமிழ்நாட்டின் பயணம், துணை தேசிய அளவில் காலநிலை நடவடிக்கைகள், இயற்கை எனும் உட்கட்டமைப்பு ஆகிய தலைப்புகளில் குழு விவாதங்கள் நடைபெற்றன. அதுமட்டுமல்லாது, சென்னை நகரத்திற்கான நிகழ் நேர சுற்றுப்புற ஒலி அளவீடு மற்றும் ஒலி வரைபடமாக்கல், தமிழ்நாடு பசுமைக் காலநிலை நிறுவனத்திற்கான வலைதளம், தமிழ்நாடு கடலோர வளங்களை நிலைநிறுத்தத்தக்க வகையில் பயன்படுத்துதல் மற்றும் நீலப்பொருளாதாரம் (TN-SHORE) திட்ட கண்காணிப்பு வலைதளம், சென்னை படுகைக்கான காலநிலையால் தூண்டப்பட்ட நீர் அபாய மதிப்பீடு மற்றும் நீர் சமநிலை எனும் அறிக்கை, செயற்கை பவழப் பாறைகளால் முன்னெடுக்கப்படும் வான் தீவு மீட்டுருவாக்கத்தின் சமூக, சூழலியல் மற்றும் பொருளாதார மதிப்பீட்டு அறிக்கை மற்றும் தமிழ்நாட்டின் மன்னார் வளைகுடாவில் உள்ள கடல் புல்வெளிகளை மையமாகக் கொண்டு சிதைவுற்ற கடலோர ஈரநிலங்களை மீட்டெடுத்தல் ஆகிய அறிக்கைகளும், காலநிலை மீள்திறன்மிகு கிராமத்திற்கான கட்டுப்பாட்டகம் (Dash board) ஆகியவையும் வெளியிடப்பட்டன.

இந்த மாநாட்டில், நிதி மற்றும் சுற்றுச்சூழல், காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, வனம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் ஆர். எஸ். ராஜகண்ணப்பன், சுற்றுச்சூழல் காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை, அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி. சுப்ரியா சாஹூ, இ.ஆ.ப., பொருளாதார வல்லுநர் மாண்டெக் சிங் அலுவாலியா, உலக வங்கியின் தெற்கு ஆசியாவிற்கான பிராந்திய பயிற்சி இயக்குநர் டாக்டர் டினா உமலி - டெனிஞ்சர், ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் திட்டத்தின் இந்தியாவிற்கான தலைவர் பாலகிருஷ்ண பிசுபதி, முதன்மைத் தலைமை வனப்பாதுகாவலர் ஸ்ரீநிவாஸ் ரெட்டி, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய தலைவர் முனைவர் எம். ஜெயந்தி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை இயக்குநர் ஆ.ர.ராகுல் நாத், தமிழ்நாடு நெய்தல் மீட்சி இயக்கத்தின் தலைமைத் திட்ட இயக்குநர் தீபக் எஸ். பில்கி, பூவுலகின் நண்பர்கள் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் ஜி. சுந்தரராஜன் உள்ளிட்ட சுற்றுச்சூழல் ஆர்வலர்கள், தமிழ்நாடு காலநிலை மாற்ற நிர்வாகக் குழு உறுப்பினர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.